# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---


2009, ஏப்பிறல் மாதம் 03 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 56/2008

### 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது : *2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(3) (அ) ஏதேனும் வர்த்தக வங்கி, விசேட வங்கி நிதிக் கம்பெனி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி –

(i) ஆறாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் உட்பிரிவின்கீழ் ஏதேனும் நடைமுறைக் கணக்கில், அல்லது சேமிப்புக் கணக்கில் போதிய நிதியைக் கொண்டுள்ள அத்தகைய கணக்கிலிருந்து பற்றுக்கள் வரியை மீளப்பெற அல்லது அனுப்பத் தவறுமிடத்து;

(ii) விடயத்திற்கேற்ப வைப்புச் சான்றிதழொன்றை அல்லது பயணிகள் காசோலையொன்றைக் காசாக மாற்றுவதன்மீது தேறிய தொகையிலிருந்து 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கழிப்பனவுசெய்ய அல்லது அனுப்பத் தவறுமிடத்து;

அத்தகைய வர்த்தக வங்கி, விசேட வங்கி, நிதிக்கம்பெனி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் செலுத்தப்படற்பாலதான பற்றுக்கள் வரியின் முழுத்தொகைக்கும் தவணைதவறிய ஒருவர் எனக் கருதப்படுதல் வேண்டும்.

2-PL 003771 - 1,200 (2009/03)

(ஆ) விடயத்திற்கேற்ப அவ்வாறு மீளப்பெறப்படாத, கழிப்பனவு செய்யப்படாத அல்லது அனுப்பப்படாத முழுத்தொகையும் அத்தகைய தொகை, ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவேண்டிய நாளை உடனடுத்துவரும் நாளிலிருந்து தவணைதவறுகையிலிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தொகை அத்தகைய வர்த்தக வங்கியிடமிருந்து, விசேட வங்கியிடமிருந்து, நிதிக் கம்பெனியிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடமிருந்து இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அறவிடப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவிலுள்ள எதுவும், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பற்றுக்கள் வரியின்தொகையை வர்த்தக வங்கியிடமிருந்து, விசேட வங்கியிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடமிருந்து முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அல்லது எந்த ஆளிடமிருந்து அத்தகைய மீளப்பெறுதல் அல்லது கழிப்பனவு செய்யப்பட்டிருக்கவேண்டுமோ அந்த ஆளிடமிருந்து முழுமையாவோ அறவிடுவதற்கு ஆணையாளர் தலைமையதிபதி பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய நடவடிக்கையை எடுப்பதினின்று அவரை தடைசெய்வதாக வாசித்து பொருள்கொள்ளப் படுதலாகாது.”.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்களை உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்